பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆண்டு தை மீ 13 உ சனிக்கிழமை (26-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர் 60

# —வளைகுடா யுத்தம்—

# பல மாதங்கள் நீடிக்கும்

## லங்கா சிறி இன்று வரும்

பருத்தித்துறைக்கு இன்று வந்து சேரவிருக்கும் "லங்கா சிறி" கப்பலில் 2 ஆயிரத்து 800 தொன் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன.

ஆயிரத்து 500 தொன் அரிசி, 280 தொன் மா, 500 தொன் சீனி, 200 தொன் பருப்பு, 20 தொன் தேயிலை, 213 தொன் பால்மா, 105 பரல் தேங்காய்எண்ணை, 100 பரல் மண்எண்ணை ஆகியனவும் தபால் மற்றும் மருந்து வகைகளும் இக்கப்பலில் வருகின்றன. (உ-3)

## ஈராக்கும் சில வெற்றிகளைப் பெறும் அமெரிக்கா ஒப்புக்கொள்கின்றது

லண்டன், ஜனவரி 26

வளைகுடாப் போர் பல மாதங்கள் நீடிக்கும். அமெரிக்காவும் பிரிட்டனும் நேற்று இதனைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டன.

வெள்ளை மாளிகையில் இருந்து வெளியான அறிக்கையில்-

தற்போதைய போரில் ஈராக்குக்குச் சில வெற்றிகளும் பன்னாட்டுப் படைகளுக்குச் சில தோல்விகளும் ஏற்படும் நிலை இருக்கிறது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் பேசுகையில்-

"ஈராக்கில் தரைப் படை வலுவிழக்கும்வரை பன்னாட்டுப்படைகளின் வான் தாக்குதல் நீடிக்கும் அதன் பின்னரே பன்னாட்டுப் படைகள் தரைப்போரில் ஈடுபடும்" என்று தெரிவித்தார். (உ-எ)

## சிலரின் செயல்களை வைத்து புலிகளை மாசுபடுத்த நான் விரும்பவில்லை!

### கலைஞர் கருணாநிதி உரை

சென்னை, ஜன 26

தமிழகத்தில் உள்ள சில போராளிகளின் செயல்களை வைத்து ஈழப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தை நான் களங்கப்படுத்த விரும்பவில்லை.

—தமிழக முதல்வர் கருணாநிதி இப்படிச் சொன்னார். சட்டசபையில் ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், அங்கு மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் பற்றி மத்திய அரசு தெரிவித்த தகவல்களை சென்னையில் உள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் நேற்று விமானக் குண்டுவீச்சு!

முல்லைத்தீவு இரண்டாம் கண்டம் என்ற இடத்தில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் மூன்று குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

இந்தத் தாக்குதலில் அதே இடத்தைச் சேர்ந்த புஷ்பவதி (வயது 32) என்ற பெண்மணி காயமுற்றார் ஒரு வீடு, ஒரு கடை என்பன சேதமடைந்தன. (உ)

## திருக்கோவிலில் 9 தமிழர் கொலை!

அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் உள்ள விசேட அதிரடிப் படையினரால் கடந்த செவ்வாயன்று கைது செய்யப்பட்ட ஒன்பது தமிழர் சித்திரவதை செய்யப்பட்டு, சுட்டுக் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் இரவு 9 மணியளவில் 3 ஏக்கர் கண்டம் பகுதியில் தங்கள் வயல்களிலும் சேனைகளிலும் காவலுக்கு இருந்த எட்டுத் தமிழரும் —

இரவு 9.30 மணியளவில் விநாயகபுரத்தில் வைத்து குணா என்பவரும் கைது செய்யப்பட்டு, முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## திங்கட்கிழமை முதல் 4-ம் கட்ட உலர் உணவு

சகலருக்குமான 4 ஆம் கட்ட உலர் உணவு விநியோகம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும்.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. (உ-3)

## வடக்கே நிவாரணம் அனுப்புவதில் சிக்கல்

அரசின் கெடுபிடி, போக்குவரத்து நெருக்கடி ஆகியவற்றால் யாழ். மாவட்டத்துக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை நிவாரணமாக அனுப்புவது கஷ்டமாக இருக்கிறது. ஆனால் மட்டக்களப்புக்கு தாராளமாக அவற்றை அனுப்ப முடிகிறது.

— இவ்வாறு தெரிவித்தார் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள —ரெட்பானா அமைப்பின் அதிகாரி— திரு. ஜேக்கப் ரெக்ஸ்மோ.

அவர் தெரிவித்த மேலும் சில தகவல்கள்:-

★ யாழ். மாவட்டத்துக்கு அனுப்புவதற்காக ரெட்பானா கொள்வனவு செய்த மருந்து வகைகள், அரசு அனுமதி அளிக்காததால் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன.

★ முல்லைத்தீவு மாவட்டத்துக்கு என கொள்வனவு செய்யப்பட்டு, அநுராதபுரம் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட பொருள்களில் ஒரு பகுதி முல்லைத்தீவுக்கு எடுத்துச் செல்லப்படாமல் இன்னும் அங்கு தேங்கிக் கிடக்கிறது.

★ கப்பல் மூலம் பொருள்கள் அனுப்ப நாம் முயற்சி மேற்கொண்டோம்; அதுவும் கைகூடவில்லை. எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்பில் கூடவிருக்கும் அரச சார்பற்ற அமைப்புக்களின் கூட்டத்தில் இதுபற்றி மீள ஆராய இருக்கிறோம். (உ-3)

## நகரில் சுத்திகரிப்புத் திட்டம் இன்று 500 பேர் சிரமதானம்

யாழ். நகரப் பகுதியை மீள் நிர்மாணம் செய்யும் திட்டத்தின் முதற்கட்டமாக—யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில்—கட்டட இடிபாடுகளை அகற்றல், சுகாதார சீர்கேடுகளை நீக்குதல், குப்பை கூளங்களை அகற்றுதல் முதலிய வேலைகளைக் கொண்ட "சுத்திகரிப்பு வேலைத்திட்டம்" இன்று முதல் ஆரம்பமாகிறது.

யாழ் மாநகர சபை, சன சமூக நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புகள் என்பன ஜன சக்தி திட்ட உதவி பெறுவோருடன் இணைந்து சிரமதான அடிப்படையில் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கிராம சேவையாளர் தெரிவுக்கு விரைவில் போட்டிப் பரீட்சை

கொழும்பு, ஜன. 26

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள கிராமசேவையாளர்கள் வெற்றிடங்களை நிரப்ப போட்டிப் பரீட்சை விரைவில் நடத்தப்படவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் திரு. செ. கணேசநாதன் இந்த தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராம சேவையாளர்கள் வெற்றிடங்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்களம் மூலமாக அரச அதிபர் பிரிவு மட்டத்தில் போட்டிப் பரீட்சை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த, அந்த கிராமசேவையாளர் பிரிவில் உள்ளவர்களுக்கே நியமனத்தில் முதலிடம் வழங்கப்படும்- என்று அவர் தெரிவித்தார்.

## நெடுந்தீவுப் பகுதியில் படையினர் கெடுபிடி

நெடுந்தீவு, ஜன. 26

நெடுந்தீவுப் பகுதியில் கடந்த ஐந்து நாட்களாக விமானப்படையினரினதும், கடற்படையினரினதும் ரோந்து நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதால் அப்பகுதி மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

அடிக்கடி தாழப்பறந்து வரும் விமானங்கள், சீ-பிளேன்கள் ஆகியவற்றிலிருந்து அவ்வப்போது வேட்டுகள் தீர்க்கப்படுகின்றன.

கடந்த ஞாயிறு விமானத்திலிருந்து தீர்க்கப்பட்ட வேட்டுகளினால் துறையில் நின்ற இரு மீன்பிடிப் படகுகள் சேதமடைந்தன.

அடிக்கடி ரோந்து வரும் கடற்படைப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

நேற்று முன்தினம் இரவு இப்பகுதியில் 'பரா' வெளிச்சத்தில் விமானங்கள் நோட்டமிட்டன.

எட்டு நாட்களின் பின் நேற்று படகுச்சேவை இடம் பெற்றது. (உ-111)

## முச்சந்தி முரளி



அம்ப ...... புஷ்ஷின்ரை ... போச்சு என்டு சொல் லுங்கோ ......!

## மீண்டும் இஸ்ரேல் மீது ஈராக் ஏவுகணை!

லண்டன், ஜன. 26

இஸ்ரவேல் மீது மீண்டும் ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

நேற்று நள்ளிரவு (இலங்கை நேரப்படி) பல ஏவுகணைகள் இஸ்ரவேலைத் தாக்கியதாக டெல் அவிவில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஸ்கட் ஏவுகணைகளை வழிமறித்துத் தாக்குவதற்காக இரண்டு 'பேட் ரீயட்' ஏவு

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [15597]

## பரீட்சை வினாத்தாள்

மார்ச் 1991 O/L பரீட்சைக்கு உதவியாக Dec 1990 இல் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி (ஆங்கிலம், சமூகக்கல்வி சமயபாடம் கோட்டுப்படம் வினாத்தாள் உட்பட) விற்பனையாகிறது. மொத்தமாக வாங்குவோர்க்கு விலைக்கழிவு உண்டு. ஆங்கில வினாத்தாள் தனியாகவும் பெற்றுக்கொள்ள முடியும். எக்ஸ்றல் இன்ஸ்ரிரியூட், இருபாலைச் சந்தி. (15580)

## கிளீன் கட்

தமிழ், ஆங்கில ரைப்பிங், றோணியோவேலைகளுக்கும், அடையாள அட்டைகளை லெமினேட் செய்து கொள்வதற்கும், மற்றும் போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கும். கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (15592)

## புதிய வகுப்புகள்

1991 ஆம் கல்வியாண்டிற்கான புதிய வகுப்புகள் ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் பிரபல ஆசிரியர்களால் 26-01-91 சனி பி.ப. 2.30 மணிக்கு ஆரம்பமாகின்றன. 219, நாவலர் வீதி (யுப்பிட்டர் வீடியோ சென்ரர் முன்பாக) யாழ்ப்பாணம். புலமைப் பரிசில் புதிய வகுப்பும் அனுமதிப் பரீட்சை மாதிரி வகுப்பும் ஆரம்பமாகி உள்ளன [15614]

## ஒப் செட் கலண்டர்கள்

கடவுள்படங்கள், குழந்தைகள் படங்கள், சினிமா படங்கள் கண்ணைக் கவரும் வர்ணங்களில் லித்தோவில் அச்சிடப்பட்ட மாதக் கலண்டர்கள் விற்பனையாகின்றன. (மீரா வெளியீடுகளும்) வியாபாரிகளுக்கு கழிவுண்டு. மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம் யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் (15607)

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

Spoken English with Grammar By B Manjula ஆங்கில மொழியை கசடறக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு [27 - 1 - 91] விசேட புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது. G. C. E (O/L) 90 91 புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன. 21/2 அரமன் வீதி கந்தர்மடம் [15512]

## சித்ராலயா ஸ்ருடியோ

தரமான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும், கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் சித்திரலயா 351, கோவில் வீதி, நல்லூர். (நல்லூர் கோவில் பின்வீதியில். கம்பன் கோட்டத்திற்கு முன்பாக) (சி/5681)

## ரைப்பிங் சேவை

தமிழ் ஆங்கிலம் (Stencils) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புக்கள் நடைபெறுகின்றது Fudo 39/17 மின்சார நிலையவீதி, 3ம் ஒழுங்கை. யாழ்ப்பாணம், (பஸ் நிலையம் முன்பாக) (சி/5664)

## மில்க்வைற்

திரவ சவர்க்காரம்
[Milk White Liquid Soap]

எவ்வித அழுக்கையும் அகற்றும் சக்தி கொண்டது, வீட்டுச் சலவைக்கு சிறந்தது. போத்தல் ரூ. 90/- ½ போத்தல் ரூ. 45- மொத்தக் கொள்வனவுக்கு விசேட கழிவு. இணுவில், திருநெல்வேலி, யாழ் நவீனசந்தை, அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற், (சி/5686)

# மேலதிக அரச அதிபராக தமிழர் - முஸ்லிம்

கொழும்பு, ஜன. 26

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் மேலதிக அரசாங்க அதிபர்களாக தமிழர், முஸ்லிம்களை நியமிக்கும்படி ஜனாதிபதி பிரேமதாஸ பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபை அமைச்சைப் பணித்து உள்ளார்.

அமைச்சர் மன்சூர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

KALALAYAAH கலாலயா

# இசை, நடன வகுப்புகள்

- ✶ சங்கீதம்
- ✶ நடனம்
- ✶ வீணை
- ✶ வயலின்
- ✶ மிருதங்கம்
- ✶ புல்லாங்குழல்

- வட இலங்கை சங்கீத சபையினரால் வருடந்தோறும் நடத்தப்படும் சங்கீத தராதரப் பத்திரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏற்ற வகையில் தரம் 1 முதல், ஆசிரியர் தரம் வரை பயிற்றுவிக்கப்படும்.
- சனி, ஞாயிறு மற்றும் வெள்ளி தவிர்ந்த கிழமை நாட்களில் மாலை நேர வகுப்புகள் நடைபெறும்.
- G C. E. O/L, A/L சங்கீத, நடன வகுப்புகளும் நடைபெறும்.

வகுப்புகள்

**தைப்பூச தினத்தன்று (30 - 01 - 91)**

பி. ப. 3. 00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

விவரங்கட்கு:

**கலாலயா**
பதிவு இல. 16020,
கப்டன் நரேன் வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ். நகர்.

(சி/5687)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்:
1971-11-03

மண்மீட்பில்:
1990-12-27

## லெப்டினன் குமரன்
(து. உதயகுமார்)

27-12 1990 அன்று ஆனையிறவு ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த குமரனுக்கு எம் இதய அஞ்சலி

குமரா உன் கொண்டாட்டம்
காலத்தில் அழியாத - வரலாறே
பாசமுடன் பழகி இங்கே பைத்தியம்
பிடிக்க வைத்து பறந்து சென்றீரே
வருவாய் எனப் பார்த்திருந்தோம்
வரலாற்றை வரும் போது அழைத்து
வந்தீரோ காலன் உன்னை
அணைக்கையிலே யாரைத்தான் - நீர்
நினைத்தீரோ நாதியற்றுத் தவிக்கின்றோம்
நாங்கள் இன்று - நாடி இங்கு வருவீரோ

உன் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:

சித்தப்பா, சித்தி, சகோதரர்கள்,
நண்பர்கள், உறவினர்கள்.

(15247)

உ

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின்
பத்தாண்டு நிறைவு நிகழ்ச்சித் தொடர் — I

# ஸ்ரீ தியாகப் பிரம்ம இசை ஆராதனை

இடம் : கம்பன் கோட்டம், நல்லூர்
காலம் : 27 - 01 - 1991 ஞாயிறு

காலை நிகழ்ச்சிகள் (9-00 — 12-00 மணி)

தலைமை :
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

**நாதஸ்வர கானாமிர்தம்**

நாதஸ்வர மேதைகள்
திரு. N. K. பத்மநாதன் திரு. M. பஞ்சாபிகேசன்
திரு. M. P. பாலகிருஷ்ணன் திரு. V. K. பஞ்சமூர்த்தி
திரு. K. R. சுந்தரமூர்த்தி திரு. R. கேதீஸ்வரன்
திரு. K. கணேசன்

தவில் மேதை
திரு. N. R சின்னராசா

தவில் இளவல்கள்
திரு. N. R. S. ரவீந்திரன் திரு T. உதயசங்கர்
திரு. K. R. S. ராமதாஸ்

பூஜை

மாலை நிகழ்ச்சிகள் (2-00 - 6-00 மணி)

தலைமை :
கலாநிதி, வித்துவான் க. ந, வேலன் அவர்கள்

மங்கள இசை
ஈழநல்லூர் பி. எஸ். பிச்சையப்பா,
ரவி, ரஜி சகோதரர்கள்

பாட்டு
சங்கீத பூஷணம் S. பத்மலிங்கம் (3-4 மணி)
சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் (4-5 மணி)
சங்கீத பூஷணம் எல். திலகநாயகம்போல் (5-6 மணி)

திரு. R. இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. பா. கண்ணன் — வயலின்
திரு. S. மகேந்திரன் — மிருதங்கம்
திரு. M. சிதம்பரநாதன் — மிருதங்கம்
திரு. S. துரைராஜா — கஞ்சிரா
திரு. K. கண்ணதாசன் — கடம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்"

திரு. தி திருநந்தகுமார் — தலைவர்
திரு. க. குமாரதாசன் — செயலர்

உதயன் - சஞ்சீவி நிறுவனத்தினர் விழா சிறப்புற வாழ்த்துகின்றனர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

"துணையும் தொழும் தெய்வமும்"

மண்ணில்:
25 - 01 - 1909

விண்ணில்:
28 - 12 - 1990



அமரர்

## திருமதி கணபதிப்பிள்ளை கண்மணி

(திதி நிருணய வெண்பா)

பூண் பிர மோதூதம் பூர்வபக்கம் மார்கழிநாள்
தூண்டுபதின் மூன்று துவாதசியில் - நீண்டபுகழ்த்
தாய்க்குலத்தின் கண்மணியாள் தான்முருகன்
தாளடைந்தாள்

சேய்க்குலமின் கேங்கத் தினம்

நாளை 27 - 01 - 1991 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நயினாதீவு தீர்தக் கரையிலும், பின்னர் நயினாதீவு இல்லத்திலும் நடைபெறும் அன்னையின் ஆத்ம சாந்தி நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்.

"கலைமாமணி வாசம்"
நயினாதீவு - 3

[15615]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பலன் தருமா?

வடக்கு - கிழக்கில் முடிவில்லாமல் நடந்து வரும் யுத்தத்தை நிறுத்த வேண்டும். அதன் பொருட்டு இப்போதைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும்; கூட்டாக முயற்சி செய்ய வேண்டும்:

இவ்வாறு தெற்கில் உள்ள இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் பெயர் பெற்ற பௌத்த பிக்குவான வண: மடிஹே பஞ்ஞாசிக மகாநாயக்க தேரர்.

தென்னிலங்கையில் அரசியலும், மகாசங்கமும் ஒன்றுடன் மற்றது பின்னிப் பிணைந்தது: அரசியலை வழிபிட்டுச் செல்லும் மேலாண்மைத் தன்மை மிகுந்தது மகாசங்கம். அரசியல் தலைவர்கள் எல்லோருமே மகாசங்கத்தின் செல்வாக்குக்கு உட்பட்டவர்களே.

இந்த நாட்டின் பிரதான அரசியல் விவகாரமான, தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாமல் முடிவில்லாமல் இழுபட்டுச் செல்வதற்கு மகாசங்கத்தின் பேரினவாதப் போக்கே மூலகாரணம்; தமிழர்களின் உரிமைகளை வழங்க முயற்சித்த அரசியல்வாதிகளைத் தடுத்த தீவிரவாதமும் மகாசங்கத்தில் இருந்து உதித்து எழுந்ததே.

எனவே வண. தேரரின் இப்போதைய வேண்டுகோள் எத்தகைய நோக்கமுடையது என்பது வெளிச்சமில்லை. தமிழர்களின் உரிமைகளை வழங்கி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கூட்டு முயற்சி செய்யச் சொல்கிறாரா? அல்லது அவர்களை அடக்கி ஒடுக்கி பிரச்சினையைத் தீர்த்துக்கட்டச் சொல்கிறாரா என்பது தெளிவில்லை.

ஆயினும் வடக்கு-கிழக்கில் முடிவில்லாமல் தொடரும் யுத்தம் நாட்டின் மீதான பெரும் பளு என்பதை வண. தேரர் உணர்கிறார், யுத்தத்தினால் நாட்டைப் பெரும் ஆபத்துச் சூழ்ந்துள்ளது என்பதையும் அவர் புரிந்து கொண்டிருக்கிறார். மொத்தத்தில் தென்னிலங்கை மக்கள் மீது விழுந்துள்ள சுமையையும், அவர்கள் எதிர்நோக்கும் ஆபத்தையும் நீக்கிவிட வேண்டும் என்று விழைகிறார் மகாநாயக்கர்.

அதன் பொருட்டு இனப்பிரச்சினை தீர்க்கப்படுவது அவசியமாகிறது.

ஆட்சியில் அமரும் இரண்டு கட்சிகளும், தமது அரசியல் லாபம் கருதி, ஒருவர் இனப்பிரச்சினையை தீர்க்க முயலும்போது மற்றவர் முட்டுக்கட்டையாக இருப்பது தேரர் நன்கு அறிந்த விடயம். அதனாலேயே அவர் இரு கட்சிகளும் கூட்டு முயற்சியில் இறங்க வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார்

பஞ்ஞாசிக தேரரின் இந்த மனப்பாக்கு மகாசங்கம் முழுவதற்கும் பரவி, அரசியல்வாதிகளைத் தூண்டுமானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இலகுவாகிவிடும். சிங்களவர் ஆளும் இனமாகவும், ஏனையவர் ஆளப்படும் மக்களாகவும் இருக்கக் கூடாது என்ற தாராள மனப்பான்மையுடன் இனப்பிரச்சினை அணுகப்பட்டால் இந்த நாட்டில் இரத்தக் களரியும், மக்கள் மீது சுமையும், அவர்களுக்கு ஆபத்தும் உண்டாகமாட்டா.

தென்னிலங்கை அரசியல்வாதிகளின் ஆட்சிப் போட்டிக்குரிய விவகாரங்களில் இருந்து இனப்பிரச்சினை விடுதலை பெற்றுவிட்டால், தேரர் விரும்பும் கூட்டு முயற்சி தக்க பலன் தரும் என நம்பலாம்.

# புலிகளுடன் பேசி தீர்வு காணுங்கள்!

## யாழ். எம். பி. சபையில் உரை

கொழும்பு, ஜன. 26

''யாழ். மக்களை பட்டினி போட்டு அடிபணிய வைக்க அரசு முயல்கிறது. ஆனால் இப்படியான வெற்றி தற்காலிகமானதே. இந்த எண்ணத்தை அரசு கைவிட வேண்டும்.''

— இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் யாழ். மாவட்ட எம். பி. திரு. கே. நவரத்தினம்.

மாகாண சபைகள் சம்பந்தமான விவாதத்தின் போது பேசிய அவர், அங்கு மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளை இலகுவில் வெற்றி காண முடியாது; விடுதலைப் புலிகள் இருக்கும் வரை சிவில் நிர்வாகம் தடை செய்யப்படும் என்று விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

எனவே விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரத்தைச் சரியான முறையில் பரவலாக்கம் செய்திருந்தால் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறி இருக்கும். ஆனால் அரசு அப்படி நடக்கவில்லை.

வளைகுடாவில் யுத்தத்தை நிறுத்தும்படி கோரும் ஜனாதிபதி பிரேமதாஸா, யாழ். குடாவில் ஊரடங்கு பிறப்பித்து விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல் நடத்துகிறார். இது நியாயமா? உலகுக்கு ஒரு நீதி, சொந்த நாட்டில் ஒரு நீதியா?

வடபகுதியில் விலைவாசிகள் உயர்ந்துள்ளன. மக்கள் பதுங்குகுழி வாழ்க்கை மேற்கொள்கின்றனர்.

இன்னமும் காலம் செல்லவில்லை. விடுதலைப் புலிகளோடு பேசி தீர்வு காணுங்கள். தமிழ் மக்களுடன் யுத்தம் நடத்தாதீர்கள்.

இனப்பிரச்சினைக்கு அரசின் அரசியல் தீர்வு தான் என்ன? அரசு ஏதாவது ஒரு தீர்வை முன்வைத்ததா? தீர்வை முன்வைக்காத அரசு, எல்லாக் குழுக்களும் பேசி முடிவுக்கு வாருங்கள் என்று கூறி குழுக்களை மோதவிடப் பார்க்கிறது.

தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருப்பதாகக் கூறும் அரசு, அதற்கு ஒரு தீர்வை முன்வைக்கக் கூடாதா?

இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்லாவுடன் நடத்தப்படும் பேச்சின் போது நல்லதொரு தீர்வு ஏற்படும் என்று நம்புகிறோம்.

— இப்படி அவர் சொன்னார். (உ-எ)

### நாளை தொடக்கம்

# கிராம சேவையாளருக்கான கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசஅதிபர்கள் தத்தமது பிரிவு கிராமசேவையாளர்களுக்கான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்துள்ளனர்.

மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளை திறம்படச் செய்வது குறித்து ஆராய்வதே இந்த கலந்துரையாடலின் நோக்கமாகும்.

கலந்துரையாடல்கள் பிற்பகல் 2-00 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்த வரிசையில் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை 27 ஆம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியிலும்—

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் 29 ஆம் திகதி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும்—

சண்டிலிப்பாய், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் 31 ஆம் திகதி சங்கானை சிவப்பிரகாசவித்தியாசாலையிலும்—

தெல்லிப்பழை, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராமசேவையாளர்களுக்கான கலந்துரையாடல் பெப்ரவரி 1 ஆம் திகதி சுன்னாகம் ராகம்ஸ் படமாளிகையிலும் -

சாவகச்சேரி, பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராமசேவையாளர்களுக்கான கலந்துரையாடல் பெப்ரவரி 4 ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் -

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராமசேவையாளர்களுக்கான கலந்துரையாடல் பெப்ரவரி 5 ஆம் திகதி வேலணை மகாவித்தியாலயத்திலும் நடைபெறும். (இ)

## நகரில் சுத்திகரிப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல இருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் பிரகாரம் பிரதி சனிக்கிழமைகள் தோறும் சுமார் 500 தொண்டர்கள் சுத்திகரிப்பு வேலைகளில் இணைந்து செயற்படுவர்.

பெப்ரவரி மாத இறுதி வரை சுத்திகரிப்பு வேலைகள் நடைபெறும்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான கூட்டம் ஒன்று நேற்று நல்லூர் மங்கயற்கரசி வித்தியாசாலையில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உள்ளூராட்சிப் பகுதி பொறுப்பாளர் திரு பொ. அருள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

அங்கு தெரிவிக்கப்பட்ட மேலும் சில தகவல்கள்:

★ முதற்கட்டமாக இன்று குருநகர் 2, 3, 4, 5 ஆம் வட்டாரங்களில் வடிகால் சுத்திகரிப்பு, கழிவுப்பொருள் அகற்றல், கிணறுகளுக்கு குளோரின் இடுதல் முதலிய வேலைகள் மேற்கொள்ளப்படும்.

★ தொடர்ந்து பெப்ரவரி 2 ஆம் திகதி குருநகரிலும், 9 ஆம் திகதி பாஷையூரிலும், 16 ஆம் திகதி அரியாலையிலும், 23 ஆம் திகதி நல்லூரிலும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

★ யாழ் பஸ்நிலைய இடிபாடுகளை அகற்ற விசேட கவனம் எடுக்கப்படும்.

★ வீதி ஒன்றுக்கு 25 பேர் என்ற வகையில் முக்கியமான 20 வீதிகளுக்கும் 500 பேர் சிரமதானப் பணிக்கு பயன்படுத்தப்படுவர்.

★ இத் திட்டம் வெற்றி பெற பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். திட்டம் வெற்றி பெற்றால் தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கு இது விஸ்தரிக்கப்படும்.

★ சுகாதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மு... [illegible] ...காரக் குழுக்கள் அமைக்கப்படும். (உ-6)

# பாலைவனத்தில் சிக்கிய பத்திரிகையாளர்கள்

ரியாத், ஜன. 26

கடந்த திங்கட்கிழமை சவூதி பாலைவனத்தில் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட அமெரிக்க, கொலம்பியா டெலிவிஷன் நிலையத்தைச் சேர்ந்த 4 பத்திரிகையாளர்கள் தற்போது ஈராக்கின் கட்டுப்பாட்டில் உள்ள குவைத்தில் இருக்கின்றனர் என அறிய வந்துள்ளது.

இதனை துபாய் வானொலி அறிவித்தது. இவர்கள் பயணம் செய்த கார் பாலைவனத்தின் நடுவில் அனாதரவாக கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்த நால்வரும் காணாமற்போய் விட்டனர் என்று ஊகிக்கப்பட்டது.

ஆனால் பாலைவனத்தில் காணப்பட்ட மனித காலடிகளை வைத்து தேடுதல் நடத்தியதில், சவூதி எல்லையைத் தாண்டி அவர்கள் குவைத்துக்குள் சென்று விட்டனர் என்பது தெரிய வந்தது.

தரையுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் அதுபற்றிய தகவல்களை போர் முனையில் இருந்து திரட்டவே அவர்கள் சென்றிருப்பதாக தெரிகிறது என்று துபாய் வானொலி அறிவித்தது.

## எண்ணெய் வயல்கள் இலக்கு

சவூதி அரேபியாவின் எண்ணெய் வயல்களை இலக்கு வைத்தே ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது. உலகின் மிகப் பிரமாண்டமான கவார் எண்ணெய் வயல் சவூதி அரேபியாவில் உள்ளது.

வளைகுடாப் போரில் தரைத் தாக்குதலை ஆரம்பிப்பதை பன்னாட்டுப் படைகள் திட்டமிட்டே தவிர்த்து வருவதாக ஜனாதிபதி சதாம் ஹுசேன் தெரிவித்தார்.

வளைகுடாப் போரில் பன்னாட்டுப் படைகளுடன் கனடாப் படை வீரர்களும் கடந்த வியாழக்கிழமை முதல் ஈடுபட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

## குவைத்தின் குரா தீவு பன்னாட்டுப் படை வசம்

வளைகுடாப் போரின் எட்டாவது நாளான வியாழக்கிழமை பன்னாட்டுப்படைகள் குவைத் நாட்டுக்குச் சொந்தமான குரா என்னும் சின்னஞ்சிறிய தீவை ஈராக்கிய படைகளிடமிருந்து கைப்பற்றின.

இத்தீவு ஆக்கிரமிப்புக்கு முன்னர் குவைத் நாட்டின் கடற்படைத் தளமாக இருந்தது. இத்தீவைக் கைப்பற்றுவதற்காக இடம்பெற்ற சண்டையில் 29 ஈராக் வீரர்கள் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டுப் படையினர் தெரிவித்தனர்.

இப்போது குவைத் நாட்டின் தேசியக் கொடி இத்தீவில் பறக்க விடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால்—

இந்தத் தீவில் இருந்து ஈராக் படைகள் தாமாகவே வாபஸ் வாங்கியதாகவும்- இத்தீவை சண்டையிட்டு கைப்பற்றியதாகப் பன்னாட்டுப் படையினர் அறிவித்திருப்பது பொய் என்றும் ஈராக் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக பக்தாத் வானொலி அறிவித்தது.

## 'புஷ்-கிரிமினல், கொலைகாரர்'

★ ஈரானின் ஆத்மீக தலைவர் அலி காமெனி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை 'கிரிமினல், கொலைகாரர்' என்று வர்ணித்தார்.

ஈராக்கில் அப்பாவி மக்களைக் கொல்லும் யுத்தத்தை புஷ் நடத்திவருகிறார் என்றும் அலி காமெனி கண்டித்தார்.

வளைகுடாப் போர் ஆரம்பமான பின்னர் ஈரான் தலைவர் அமெரிக்க ஜனாதிபதி மீது கடுமையாகக் கண்டனம் தெரிவித்து இருப்பது இதுவே முதல் தடவை ஆகும்.

## ஈரான் நிராகரித்தது

ஈராக்குக்கு ஆதரவாக வளைகுடா போரில் ஈரான் இறங்கவேண்டும் என்ற கோரிக்கையை அந்த நாட்டு ஜனாதிபதி ரஸ்வன்ஜானி நிராகரித்து விட்டார். அப்படி போரில் ஈடுபடுவது தற்கொலைக்கு ஒப்பான செயல் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஈரானில் கறுப்பு மழை!

ஈரானில் புஷேஹ்ர் என்ற இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பத்து நிமிடங்கள் ''கறுப்பு மழை'' பெய்தது.

குவைத்தில் எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய் வயல்களில் இருந்து எழும்பிய கரும்புகையே 'கறுப்பு மழை' பெய்யக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

## 'புகைத்திரை' திட்டம்

பன்னாட்டுப் படைகளை குழப்பத்தில் ஆழ்த்த 'புகைத் திரை'யால் வளைகுடாவை மூழ்கடிக்கும் திட்டம் ஒன்றை ஈராக் செயற்படுத்துவதாக பன்னாட்டுப் படையினர் கூறியுள்ளனர்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே குவைத்தில் உள்ள எண்ணெய் வயல்களுக்கு ஈராக்கியர் தீவைத்து வருவதாகக் கூறப்படுகிறது.

எண்ணெய் வயல்கள் எரிவதால் எழும்பியுள்ள கரும்புகை கருமேகமாகச் சூழ்ந்ததால் நேற்று ஈரானின் தென்பகுதி பகல் வேளையில் இருளில் மூழ்கியதாக பி. பி. சி. தெரிவித்தது.

## ஈராக் கப்பல்கள் மீது தாக்கு

ஈராக் கடற்படைக் கப்பல்கள் மீது பன்னாட்டுப் போர் விமானங்கள் தீவிரத் தாக்குதலை ஆரம்பித்திருக்கின்றன என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

குவைத் அருகே ஈராக்கிய போர்க் கப்பல்கள் இரண்டை பன்னாட்டுப் போர் விமானங்கள் மூழ்கடித்தன. அப்போது 3 ஈராக்கிய வீரர் கொல்லப்பட்டனர். 51 பேர் சிறைபிடிக்கப்பட்டனர் என்று அமெரிக்க தரப்பினர் தெரிவித்தனர்.

## 2,000 பேர் பலியாவர்!

ஈராக்கில் பன்னாட்டுப் போர்விமானங்கள் இன்னும் நான்கு வாரங்கள் தொடர்ந்து வான் தாக்குதலில் ஈடுபடுமானால், இரண்டாயிரத்துக்கு அதிகமான பொதுமக்கள் உயிரிழப்பர் என்று அமெரிக்க அரசு மதிப்பிட்டுள்ளது. இத்தகவலை 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AL 91, AL 92

CHEMISTRY 91 - சேதன (Organic)
92 - அடிப்படை (BASIC)

திரு. மகாதேவா B. Sc.

PHYSICS 91 - மின்னியல் (Electricity)
91 - வெப்பவியல் (Heat)
92 - ஒளியியல் (Light)

திரு. கணேசன் B. Eng.

ஆரம்பம்: 26 — 01 — 1991

BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்.

[15248]

கமநல சேவைகள் திணைக்களம்
ஒப்பந்தகாரர்களையும், வழங்குநர்களையும்

## பதிவு செய்தல் - 1991

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் சம்பந்தமாக எமது திணைக்களத்தினால் 1 - 1 - 91ஆம் திகதிய பத்திரிகையின் விளம்பரம் தொடர்பாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 1991 ஜனவரி 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட உதவி ஆணையாளர்,
கமநல சேவை,
யாழ்/மாவட்டம்.

[சி/5688]

## வில்லியம் ஹர்வே ஞாபகார்த்த மருத்துவமனை
## William Harvey Memorial Hospital

பொதுமக்களின் நலன் கருதி மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது. வில்லியம் ஹர்வே ஞாபகார்த்த மருத்துவமனை வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெறவும் ஆய்வுகூட மருத்துவப் பரிசோதனைகளுக்கும் தரமான சிகிச்சைகளுக்காகவும் இரவு பகல் சேவையை 1991 ஜனவரி 26ஆம் திகதி முதல் வில்லியம் ஹர்வே ஞாபகார்த்த மருத்துவமனை மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது.

17, Kandy Road,
Chundikuli, Jaffna. —நிர்வாகம்
(C/5684)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நாகலிங்கம்
நவரட்ணம்



தோற்றம்:
05-07-1934

மறைவு:
17-01-1989

ஓரிரண்டு ஆண்டுகள் அகன்றனையோ
ஆதரிப்பார் இன்றி வாடுவையோ
ஆண்டவன் தன்னடி சேர்ந்திரோ
ஆறுதல் தானது பெற்றீரோ
எத்தனை ஆண்டும் சென்றாலும்
உங்கள் அன்பு முகம் மறந்திடுமோ.

உங்கள் பிரிவை எண்ணித் தவிக்கும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. [15250]

## இதய அஞ்சலி

### செல்வன் சண்முகரட்ணம் சக்திபாலன்

எமது கழகத்தின் அங்கத்தவரும், இணைபிரியா நண்பனுமாகிய விதானைலேன், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்வன் சண்முகரட்ணம் சக்திபாலன் (விக்ரம்) (பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்குத் தெரிவானவர்) அகால மரணமடைந்த செய்தியை ஆற்றொணாத் துயருடன் அறியத்தருகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்

சம்பியன் லேன்,
கொக்குவில். [15624]

## கல்வி அதிகாரி கைது

யாழ்ப்பாணம், ஜன.26

திருகோணமலை மாவட்டத்தில் கல்வி அதிகாரியாக கடமையாற்றி வரும் தங்கராஜா என்பவர் திருகோணமலை துறையில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 'உ-6'

## ஹெலி வீசிய பிரசுரம்

கைதடி, ஜன. 26

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் ஹெலிக்கொப்டரிலிருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. [உ-74]

## கோப்பாயில் ஹெலித்தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 26

கோப்பாய், இருபாலை பகுதிகளில் நேற்று பிற்பகல் 2. 45 மணியளவில் ஹெலிக்கொப்டரிலிருந்து சரமாரியாக வேட்டுகள் தீர்க்கப்பட்டன. எனினும் பெருஞ்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

## சரணடைய அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் அரசில் பதவி வகித்த பிரதமர் உட்பட பத்து அமைச்சர்கள் உடனடியாக பொலீஸாரிடம் சரணடைய வேண்டும் என்று பங்களாதேஷ் அரசு அறிவித்துள்ளது.

## 1 லட்சம் பேர் மரணம்

வாஷிங்டன், ஜன 26

எய்ட்ஸ் நோய் காரணமாக கடந்த பத்தாண்டு காலத்தில் அமெரிக்காவில் மரணமானவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டி விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதில் மூன்றில் ஒரு பங்கினர் கடந்த ஆண்டில் இறந்தனர் என்று அமெரிக்க சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மீண்டும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கணைகள் ஏவிவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவை ஸ்கட் ஏவுகணைகளை வழிமறித்துத் தாக்கினவா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. [உ]

## புலிகளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் புலிகளிடமோ அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளிடமோ நான் தெரிவிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் பற்றி 'தகவல்'களைத்தான் மத்திய அரசு மாநில அரசிடம் கொடுத்ததாக பிரதமர் சந்திரசேகர் சொன்னாரே தவிர 'இரகசியங்கள்' என்று அவர் கூறவில்லை.

''தகவல்'', ''இரகசியம்'' ஆகிய இரண்டு வார்த்தைகளுக்கும் மிகுந்த வேறுபாடுள்ளது.

விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை எடுக்கும் படி மத்திய அரசு மாநில அரசை நிர்ப்பந்தித்ததாக நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் குறிப்பிடவில்லை.

விடுதலைப் புலிகள் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து 'வயர்லெஸ்' மூலம் பொலீஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

அப்படி தெரிவிக்கப்பட்ட தகவல்களை விடுதலைப் புலிகள் தங்களிடமிருக்கும் வலுவான தகவல் சாதனங்கள் மூலம் இடைமறித்துக் கேட்டு, அவர்கள் பின் தமிழர்களுக்குள் பகிர்ந்திருக்கக் கூடும்.

தமிழகம் போராளிகளின் கூடாரமாக மாறுவதற்கு [illegible]
[illegible] அவர் [illegible] [உ-ஏ]

## யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

## முதலாம் ஆண்டு, ஆறாம் ஆண்டு, பிரத்தியேக தையல் வகுப்பு

ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் 31 - 1 - 91 வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆறாம் ஆண்டுக்குரிய பிரவேச பரீட்சை 2 - 2 - 91 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். தகைமைவுள்ள பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்.

24 - 1 - 91 [15621]

# மரண அறிவித்தல்கள்

## நிக்கொலஸ்பிள்ளை அருளானந்தர்

நிக்கொலஸ்பிள்ளை அருளானந்தர் ஜேர்மனியில் 21 - 01 - 91 இல் காலமானார். இவர் சிசிலியாவின் அன்புக் கணவரும், ராஜகுலேந்திரன், குபேரகுலேந்திரன், போஜகுலேந்திரன், மாசில்லா ஜெகரெட்சனி (எசமாட்டி) (ஜேர்மனி) யாழரசி (அரசி) (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு தந்தையும், வினோ, கிறிஸ்வெல் பிரவீன், நிஷாபி, நிந்தினி, ஜெனி, அஸ்மிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். நல்லடக்கம் 25 - 01 - 91 அன்று ஜேர்மனியில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. ம. அ. குபேரகுலேந்திரன்.

மாசில்லா மாளிகை,
அச்சுவேலி. (15622)

## செல்வன் சண்முகரட்ணம் சக்திபாலன்

யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவருமாகிய கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்வன் சண்முகரட்ணம் சக்திபாலன் 25-01-1991 இல் அகால மரணமானார். இவர் சண்முகரட்ணம் தெய்வநாயகி தம்பதிகளின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற ச. நந்தகுமாரனின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26 - 01 - 91 சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
ச. தயாபரன்

'' சக்தி இல்லம் ''
விதானை லேன்,
கொக்குவில் கிழக்கு. [15623]

## திரு. சதாசிவம் தம்பிஐயா

ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த திரு. சதாசிவம் தம்பிஐயா சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் கண்ணம்மாவின் அன்புக் கணவரும், திரு. சந்திரசேகரம் (பஞ்சு), ஜெகதாம்பிகை (தேவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இ.மகேசன் (எலக்ரிஷன்), பத்மாவதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சந்திரசேகரம் (பஞ்சு),
மகேசன்.

ஆனைப்பந்தியடி.
[15401]

## செ. சீவரத்தினம்

செல்லத்துரை சீவரத்தினம் (பிரபல புகையிலை வர்த்தகர்) காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரை, இராசம் ஆகியோரின் அன்பு மகனும், தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், மைதிலி, சுதர்சினி, சுதர்சன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாக்கியம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும், தில்லை நடராசா, பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், அச்செழு காலஞ்சென்ற முத்துக்குமாரு, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும்—

மு. கந்தசாமி (மன்னார் (விவசாய கட்டட மேற்பார்வையாளர்), தர்மலிங்கம், தங்கராசா, ஆறுமுகநாதன் (ஜேர்மனி), செல்வராசா (ஜேர்மனி), யோகராசா (கனடா) ஆனந்தராசா, தவராணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற கி. மதியாபரணத்தின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை நான்கு மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளாக வீதி, தகவல்:
திருநெல்வேலி. [15402] சி. தங்கலஷ்மி (மனைவி)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-1-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org